සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

GIT | T | I

සාමාන්‍ය තොරතුරු තාක්ෂණය I
பொதுத் தகவல் தொழில்நுட்பம் I
General Information Technology (GIT) I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

තෙවන වාර විභාගය 2025
மூன்றாம் தவணைப் பரீட்சை 2025
Third Term Examination 2025

අමතර කියවීම් කාලය මිනිත්තු 10
மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்
Additional Reading time 10 minutes

12 වන ශ්‍රේණිය
தரம் 12
Grade 12

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- தரப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினை தெரிவு செய்து கோடிடுக.

1. ஒரு நிறுவனமானது தீர்மானம் மேற்கொள்வதற்கு சரியான மற்றும் துல்லியமான தகவல்கள் அவசியமாகும். காலாவதியான அல்லது பிழையான தகவல்களை பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்கு எது?
   1) முறைமையின் வேகத்தை அதிகரிக்கிறது.
   2) எப்போதும் சரியான முடிவுகளை எடுக்க வழி வகுக்கின்றது.
   3) பிழையான முடிவுகள் மற்றும் செயற்பாட்டு பிழைகள் ஏற்படும்
   4) சேமிக்கப்பட்ட தரவின் அளவை குறைக்கும்.

2. பின்வரும் மென்பொருள் வகைகளையும் அவற்றின் பிரதான தொழிற்பாடுகளையும் சரியாகக் கொண்ட விடை எது?
   1) தொகுப்பி - வைரஸ் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் பயன்பாட்டு மென்பொருள்
   2) பணிசெயல்முறைமை - கோப்புக்களை முகாமை செய்யப்பயன்படும் பிரயோக மென்பொருள்
   3) விரிதாள் - நிதிப் பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்படும் முறைமை மென்பொருள்
   4) சாதனச் செலுத்தி - வன்பொருளுடன் தொடர்பு கொள்ள உதவும் முறைமை மென்பொருள்

3. $47_{10}$ எனும் பதின்ம எண்ணை பதினறும எண்ணாக மாற்றும் போது கிடைக்கும் விடை யாது?
   1) $2F_{16}$ 2) $3D_{16}$ 3) $4A_{16}$ 4) $1F_{16}$

4. $1101101_2$ எனும் இரும எண்ணை எண்ம எண்ணாக மாற்றும் போது கிடைக்கும் விடை யாது?
   1) $155_8$ 2) $165_8$ 3) $157_8$ 4) $153_8$

5. பின்வரும் BCD மற்றும் ASCII குறிமுறைகள் பற்றிய கூற்றுக்களில் சரியான கூற்று எது?
   1) BCD ஆனது ஒரு தசம எண்ணை வகைகுறிப்பதற்கு 8 பிற்றுக்களை பயன்படுத்தும் அதே வேளை, ASCII ஆனது எழுத்துக்களை வகைகுறிக்க 4 பிற்றுக்களை பயன்படுத்தும்.
   2) BCD ஆனது பிரதானமாக எழுத்துக்களுக்களை வகைகுறிக்க பயன்படும் அதே வேளை, ASCII ஆனது எண் தரவுகளை வகைகுறிக்க பயன்படும்.
   3) BCD ஆனது தசம எண்ணை 4 பிற்றுக்களில் வகைகுறிக்கும் அதே வேளை ASCII ஆனது எழுத்து, எண் மற்றும் குறியீடுகளை 7 அல்லது 8 பிற்றுக்களில் வகைகுறிக்கும்.
   4) BCD மற்றும் ASCII ஆகியன இரும தரவுகளை வகைகுறிக்க ஒரே எண்ணிக்கையிலான பிற்றுக்களை பயன்படுத்துகின்றன.


infotechtamil.com

6. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A- வைரஸ்களிலிருந்து தரவைப் பாதுகாத்தல்.

B- தரவு சேமிப்பு சாதனங்களில் உள்ள கோப்புகள் மற்றும் கோப்புறைகளின் குறிப்புகளை பேணுதல்.

C- வட்டு செலுத்திகள் மற்றும் அச்சுப்பொறிகள் போன்ற புறச்சாதனங்களைக் கட்டுப்படுத்துதல்.

D- வரைதல் வேலைகளுக்கு (Graphic Design) வசதியேற்படுத்திக் கொடுத்தல்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் பணிசெயல் முறைமையின் செயல்பாடுகள் எவை?

1) A மற்றும் B மட்டும் 2) B மற்றும் C மட்டும்

3) A, B, மற்றும் C மட்டும் 4) A, B, C, D அனைத்தும்

7. பின்வருவனவற்றுள் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளுக்கான உதாரணம் எது?

A. MS. Excel B. MS Word C. Linux

1) A மற்றும் B மட்டும் 2) B மட்டும்

3) A மற்றும் C மட்டும் 4) A, B, C அனைத்தும்

8. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருட்களில் மட்டும் காணப்படும் வசதி எது?

1) படங்களை உட்புகுத்தல் 2) அட்டவணைகளை அமைத்தல்

3) அஞ்சல் ஒன்றிணைப்பு 4) எழுத்து மற்றும் இலக்கண பிழை திருத்தம்

9. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஆவணம் ஒன்றைக் கணினியில் சேமிப்பதற்காக பயன்படுத்தக் கூடிய குறுக்குச் சாவி (Shortcut keys) எது?

1) Ctrl + S 2) Ctrl + O 3) Ctrl + P 4) Ctrl + C

10. கீழே A யில் தரப்பட்டுள்ள வசனத்தை B யில் தரப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடிய கருவி எது?

A- She is a kind woman *B- She is a kind woman*

1) **B** மற்றும் *I* 2) U மற்றும் *I* 3) $x_2$ மற்றும் U 4) Aa மற்றும் *I*

11. விரிதாள் கலமொன்றில் = 6/2*(10+8)/3 எனும் சூத்திரத்தை இடும் போது கலத்தில் கிடைக்கும் வெளியீடு எது?

1) 12 2) 23 3) 15 4) 18

- கீழே காட்டப்பட்டுள்ளது விரிதாள் (MS Excel) மென்பொருளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட ஒரு பழ விற்பனை நிலையத்தின் விற்பனை விபரம் ஆகும். அதனைக் கொண்டு 12 தொடக்கம் 14 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | நாள் | பழம் | அலகின் விலை | எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி |
| 2 | 2025/01/16 | ஆப்பிள் | 70 | 23 | |
| 3 | 2025/01/16 | தோடம் | 50 | 7 | |
| 4 | 2025/01/16 | மாம்பழம் | 40 | 15 | |
| 5 | 2025/01/16 | அன்னாசி | 150 | 6 | |
| 6 | 2025/01/16 | மாதுளை | 750 | 3 | |
| 7 | | | | | |



infotechtamil.com

12. ஆப்பிளின் மொத்தப் பெறுமதியினை கணிப்பதற்காக E2 கலத்தில் இடவேண்டிய சூத்திரம் யாது?

1) =C2*D2 2) =C2,D2 3) =C2:D2 4) =B2*C2

13. ஆகக் கூடிய அலகின் விலையை C7 கலத்தில் பெறுவதற்கான சார்பு யாது?

1) =SUM (C2 : C6) 2) =MAX (C2 : C6) 3) =MIN (C2 : C6) 4) =AVG (C2 : C6)

14. பழ விற்பனையின் மொத்தப் பெறுமதியினையும் E7 கலத்தில் பெறுவதற்கான சார்பு யாது?

1) = SUM (E2 , E6) 2) = TOTAL (E2 : E6) 3) = MIN (E2 : E6) 4) = SUM (E2 : E6)

15. நிகழ்த்துகை முன்வைப்பொன்றினை சேமிப்பதற்கான கோப்பு நீட்சி யாது?

1) .docx 2) .pptx 3) .xlsx 4) .pdf

16. நிகழ்த்துகை முன்வைப்பொன்றில் உள்ள தளக் கோளத்தின் (Layout) பிரதான தொழில் யாது?

1) படவில்லை ஒன்றில் எழுத்துக்கள், படங்கள் மற்றும் உருக்கள் போன்றவற்றை ஒழுங்கமைத்தல்
2) படவில்லை ஒன்றின் பின்னணி நிறத்தினை மாற்றுதல்
3) நிகழ்த்துகை ஒன்றை சேமித்தல்
4) முன்வைப்பு ஒன்றை நிகழ்த்துதல்.

17. நிகழ்த்துகை ஒன்றிலே ஒரு படவில்லையில் உள்ள எழுத்துக்களுக்கு அல்லது உருக்களுக்கு அசைவூட்டங்களை உட்புகுத்தப் பயன்படுவது எது?

1) நிலை மாறல்கள் (Transitions)
2) அசைவூட்டங்கள் (Animations)
3) கருப்பொருள்கள் (Themes)
4) படவில்லை வரிசைப்படுத்தல (Slide Sorter)

18. நிகழ்த்துகை ஒன்றில் பார்வையாளர்கள் பார்க்கும் விதத்தில் முன்வைப்புச்செய்வதற்கு பயன்படும் பார்வை எது?

1) சாதாரண பார்வை (Normal View)
2) படவில்லை வரிசைப்படுத்தல் பார்வை (Slide Sorter View)
3) முழுமையான பார்வை (Slide Show View)
4) குறிப்புப் பக்கப் பார்வை (Notes Page View)

19. பின்வரும் மென்பொருட்களில் தரவுத்தள முகாமை மென்பொருள் எது?

1) MS Paint 2) MS Access 3) MS Word 4) MS Excel

20. கைமுறை மற்றும் இலத்திரனியல் தரவுத்தளங்களை ஒப்பிடும் போது இலத்திரனியல் தரவுத்தளத்தின் நன்மைகள் என்ன?

A - தரவை புதுப்பித்தல் எளிது.
B - சேமிப்பதற்கு அதிக இடம் தேவைப்படும்.
C - தரவுப்பகுப்பாய்வு செய்தல் எளிது.

1) A மட்டும். 2) B மட்டும். 3) A மற்றும் B மட்டும். 4) A மற்றும் C மட்டும்.

21. மாணவர்களின் விபரங்கள் அடங்கிய ஒரு அட்டவணையில் மாணவர்களின் சுட்டெண், பெயர் போன்றவற்றுக்கான பொருத்தமான தரவு வகைகள் எவை?

1) Text, Text 2) Boolean, Text 3) Text, Number 4) Text, Currency



infotechtamil.com

22. பின்வருவனவற்றுள் வரைவியல் மென்பொருள் எது?
   1) Audacity    2) Photo Bucket    3) GIMP    4) Ardour

23. வர்ணப் படமூலம் ஒன்றை உருவாக்க எத்தனை பிற்றுக்கள் பயன்படுத்தப்படும்?
   1) 48 பிற்றுக்கள்    2) 24 பிற்றுக்கள்    3) 32 பிற்றுக்கள்    4) 128 பிற்றுக்கள்

24. பின்வருவனவற்றுள் வர்ண மாதிரியம் எது?
   1) GIF    2) JPEG    3) PNG    4) CMYK

25. பின்வருவனவற்றுள் வரைபு நெருக்கத்திற்கு பயன்படுத்தப்படும் பாதிப்படையாத வரைபு நெருக்கம் எது?
   1) PNG    2) BMP    3) JPEG    4) TIFF

26. RGB வர்ண மாதிரியத்தில் உள்ளடங்காத வர்ணம் எது?
   1) பச்சை    2) நீலம்    3) கறுப்பு    4) சிவப்பு

27. ஒளியியல் நார் (Fiber – optic) வடங்களைப் பற்றிய சரியான கூற்று எது?
   1) அலைகளைப் பயன்படுத்துகிறது
   2) மின் சமிக்ஞைகளைப் பயன்படுத்துகிறது
   3) ஒளிச் சமிக்ஞைகளைப் பயன்படுத்துகிறது
   4) வானொலிச் சமிக்ஞைகளைப் பயன்படுத்துகிறது

28. முகில் கணனிகள் (ஊடழரன ஊழஅிரவபெ) சம்பந்தமான சரியான கூற்று எது?
   1) கணினிகளின் நினைவகத்தை அதிகரிக்கும் ஒருமுறையாகும்
   2) தகவல்களை சேமிக்க பயன்படுத்தும் ஒரு உத்தியாகும்
   3) நேரடி தொடர்பாடலை மேற்கொள்ளும் ஒரு முறையாகும்.
   4) இணையம் வழியாக சேவைகளை வழங்கும் ஒரு தொழில்நுட்பமாகும்

29. பொருட்களுக்கான இணையத் தொழிநுட்பமானது (IoT) பின்வரும் எச்சந்தர்பத்தில் பயன்படுத்தப்படும்?
   1) இணையத்துடன் பொருட்கள் மற்றும் உபகரணங்களையும் இணைப்பதற்கு
   2) கணினியை இணைப்பதற்கு
   3) சமூக ஊடகங்களுக்காக
   4) கைத்தொலைபேசிகளை இயக்குவதற்கு

30. வலைப்பக்கமொன்றின் பின்னணியை மஞ்சள் நிறமாக மாற்றியமைப்பதற்கான சரியான html குறிமுறை எது?
   1) < body background='yellow'>
   2) < body bgcolor="yellow">
   3) <background>yellow</background>
   4) <body style="background-color:yellow">

31. html இல் <br> ஒட்டின் செயற்பாடு யாது?
   1) வரிகளை வேறாக்குதல் (Line Break)
   2) பக்கங்களை வேறாக்குதல் (Page Break)
   3) அடைப்புக்குறி (Bracket) இடுதல்
   4) பிரிவுகளை வேறாக்குதல் (Section Break)



infotechtamil.com

32. மீயிணை ஒன்றினை உருவாக்குவதற்கான சரியான html குறிமுறை யாது?

1) <a url=http://DOEweb.com>DOEweb</a>

2) <a> http://DOEweb.com</a>

3) <a href="http://DOEweb.com">DOEweb</a>

4) <a name=http://DOEweb.com>DOEweb</a>

33. html குறிமுறை தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A- <hr> மூலம் வலைப்பக்கம் ஒன்றில் கிடைமட்டக் கோடு காட்டப்படும்.

B- <li> ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல் ஒன்றை உருவாக்குதல்.

C- <p> பக்கங்களை வேறாக்கும்.


மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் சரியானது எது?

1) A மட்டும்
2) C மட்டும்
3) A மற்றும் B மட்டும்
4) A மற்றும் C மட்டும்

34. html குறிமுறை தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

<dl><dt>Rice</dt>
<dd>White Rice</dd>
<dt>Tea</dt>
<dd>Milk Tea</dd></dl>

மேலே தரப்பட்ட html குறிமுறைக்கான வெளியீடாக அமைவது,




35. பின்வரும் கூற்றுக்களில் வலைத்தளம் பற்றிய பிழையான கூற்று எது?

1) ஒவ்வொரு வலைத்தளத்தின் பிரதான பக்கமும் "முகப்புப் பக்கம்"(Home page)என்று அழைக்கப்படுகிறது.

2) பொதுவாக முகப்புப் பக்கம் என்பது ஒரு பார்வையாளர் ஒரு வலைத்தளத்தைப் பார்வையிடும்போது பார்க்கும் முதல் பக்கமாகும்.

3) ஒரு வலைப்பக்கத்தில் எழுத்துக்கள், படங்கள், வரைவியல்கள் , அசைவூட்டங்கள், ஒலிகள், காணொளிகள் மற்றும் இணைப்புகள் போன்ற பல்லூடக உள்ளடக்கங்கள் இருக்கக் கூடாது.

4) ஒரு வலைத்தளத்தின் முகப்புப் பக்கத்தில் பொதுவான தகவல்கள் மற்றும் வலைத்தளத்திற்கான இணைப்புகள் காணப்படுகின்றன.

infotechtamil.com

36. இணையத்தளம் ஒன்றை உருவாக்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய பயனரின் தேவைகள், தேவைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் கருத்திற் கொள்ளப்படுகின்றது. கீழே தரப்பட்ட கூற்றுக்களில் தேவைகளை பகுப்பாய்வு செய்தல் தொடர்பாக பிழையான கூற்று எது?

1) இது வலைத்தளத்தின் வணிக மாதிரியுடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் வாய்ப்புகளை பகுப்பாய்வு செய்ய உதவும் ஒரு செயன்முறையாகும்.
2) இங்கே, வலைத்தளத்தை உருவாக்குவதன் நோக்கம் அடையாளம் காணப்படுகிறது.
3) பாதுகாப்புத் தேவைகள் மற்றும் எதிர்கால மேம்பாடுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.
4) பயனர் இடைமுக வடிவமைப்பு, சந்தா மற்றும் பதியும் செயன்முறை ஆகியவை தேவைகள் பகுப்பாய்வில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய கூறுகளாக கருதப்படவில்லை.

37. கீழே காட்டப்பட்டுள்ள சேவைகளை கருதுக.

A. அடையாள அட்டை விநியோகித்தல்
B. பிறப்புச்சான்றிதழ் விநியோகித்தல்
C. வானிலை எதிர்வுகூறல்

மேற்கூறப்பட்ட சேவைகளில் மின்னரசாங்கத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள் எவை?

1) A மற்றும் B மட்டும்.
2) A மற்றும் C மட்டும்.
3) B மற்றும் C மட்டும்.
4) A, B, C, அனைத்தும்

38. பின்வருவனவற்றுள் கணினியின் தர்க்கப் பாதுகாப்பிக்காக பயன்படுத்தும் உத்தி எது?

1) எழுச்சிப் பாதுகாப்பு
2) சாவிப்பலகை உறை
3) வலிமையான கடவுச்சொல்லை பாவித்தல்.
4) UPS இன் பயன்படுத்தல்.

39. தொலைக் கல்வி மற்றும் தொலை மருத்துவம் ஆகியவற்றை பயன்படுத்தும் துறைகள் ஒழுங்கு முறையே காட்டும் தெரிவு எது?

1) சுகாதாரத் துறை மற்றும் கல்வித்துறை
2) கல்வித்துறை மற்றும் சுகாதாரத் துறை
3) சுகாதாரத் துறை மற்றும் மீன்பிடித்துறை
4) கல்வித்துறை மற்றும் போக்குவரத்துத்துறை

40. இணையத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது தொடர்பான பின்வரும் கூற்றுகளில் உண்மையானது எது?

A. பாதுகாப்பான பயனர் பெயர் மற்றும் கடவுச்சொற்களை பயன்படுத்தல்.
B. தேவையில்லாமல் உமது தனிப்பட்ட விபரங்களை வழங்காதிருத்தல்.
C. தெரியாத வலைத்தளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்தல்.

1) A மற்றும் B மட்டும்.
2) A மற்றும் C மட்டும்.
3) B மற்றும் C மட்டும்.
4) A, B, C, அனைத்தும்

***

infotechtamil.com

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 4 | 21 | 1 | 31 | 1 |
| 2 | 4 | 12 | 1 | 22 | 3 | 32 | 3 |
| 3 | 1 | 13 | 2 | 23 | 2 | 33 | 4 |
| 4 | 1 | 14 | 4 | 24 | 4 | 34 | 2 |
| 5 | 3 | 15 | 2 | 25 | 4 | 35 | 3 |
| 6 | 3 | 16 | 1 | 26 | 3 | 36 | 4 |
| 7 | 2 | 17 | 2 | 27 | 3 | 37 | 1 |
| 8 | 3 | 18 | 3 | 28 | 4 | 38 | 3 |
| 9 | 1 | 19 | 2 | 29 | 1 | 39 | 2 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 2 | 40 | 3 |

**General Information Technology**

**3rd Term Test 2025 (NWP) MCQ Answers**